Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 73/2022

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09-ம் தேதி திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | கிராம நிர்வாக அலுவலர் |
| பெயர் | - | விஜய்அமிர்தராஜ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜெயரட்சகன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | ஆனைமலை | வயது | - | 43 |
| சாதி | - | - | | | |

**09.10.2023**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது ஆனைமலை வட்டம் கரியான் செட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலகராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் வால்பாறை வட்டம் ஆனைமலை குன்றுகள் கிராமம் வடக்கு கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னிடம் க.சா.எண். 1/3 B என்ற பூமியின் ஓனர்சிப் சம்பந்தமாக சான்று கேட்டார்கள்.

2. வட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தார்கள். நான் அதன் பேரில் எனது அறிக்கையை கொடுத்தேன். அந்த பூமியை பொறுத்து நிறைய பேர் ஓனர்சிப் கேட்டு அது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்து வருவதால் அது முடியும் வரை யாருக்கும் உரிமையாளர் தொடர்பான சான்று வழங்க இயலாது என்று அறிக்கை கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**:

1. போலீசார் விசாரித்தபோது அந்த சொத்தின் தற்போதைய உரிமையாளர் யார் என்றகேள்விதான் என்னிடம் கேட்கப்பட்டது என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், வால்பாறை